1984 மார்ச் 27]

விசைப்படகுதாரர்கள் கடலில் மீன் பிடிப்பதை வரன்முறைப்படுத்துவதற்கான சட்டம்.

*482—(வினா எண் 20889) திரு. சி. கணேசன் : மாண்புமிகு மீன் வளத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விசைப்படகுக்காரர்கள் கடலில் 3 மைல் தள்ளிச் சென்று மீன்பிடிக்க வேண்டியதை வலியுறுத்தி அதற்கான புதிய சட்டத்தை உருவாக்க அரசு எடுத்துக்கொண்ட முயற்சி இப்போது நடைமுறைப்படுத்தப்பட்டு விட்டதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. க. கலைமணி : (அ) மற்றும் (ஆ) : தமிழ்நாடு 1983 ஆம் ஆண்டு மீன் பிடித்தலை முறைப்படுத்தல் சட்டம், சனவரித் திங்கள் 6 ஆம்நாள் அன்று செயலுக்கு கொண்டு வரப்பட்டது. இச்சட்டத்தின் பிரிவு 5 (3) மற்றும் அதன் விவர அட்டவணையின்படி விசைப்படகுகள் கடலில் 3 கடல் மைல்களுக்கு அப்பால்தான் மீன்பிடிக்க வேண்டும். ஆனால் இப் பிரிவு அரசியல் சட்டத்திற்கு முரணானது என்று கூறி விசைப்படகுதாரர்கள் சென்னை உயர்நீதி மன்றத்தில் ரிட் மனுக்களை சமர்ப்பித்தார்கள். அதன் பேரில் சட்ட பிரிவு 5 (3) உள்ள நிபந்தனைகளை நிறுத்தி வைக்கும் இடைக்கால தடையாணையை உயர்நீதி மன்றம் பிறப்பித்துள்ளதால், சட்டம் நடைமுறைப்படுத்துவது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு : ஓர் உரையின் தொடக்கத்தில் *உடுக்குறியிடப் பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

சட்டமன்ற பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

3. தகவல் கோரல்

சட்டமன்ற விடுதி வளாகத்தில் ஏற்பட்ட தீ விபத்து.

திரு. ந. சிவஞானம் : பாயிண்ட் ஆப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இரவு 8 மணி அளவில் சென்னை சட்டமன்ற விடுதி வளாகத்திற்குள் தீ விபத்து ஏற்பட்டு இதனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பீதியும் அச்சமும் ஏற்பட்டுள்ளது. இவ்வாறு ஏற்படாமல் தடுப்பதற்கு தலைவர் அவர்கள் தயவுசெய்து நடவடிக்கை எடுக்க வேண்டும்.